DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

CC. No. 74/2019

Prosecution witness – PW.11

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. சேகர் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present)

13.05.2024 – 02.25 PM

சாட்சியை நிலைய த.கா–246 அவர்கள் அடையாளம் காட்டினார்.

முதல் விசாரணை

1. எனக்கு சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம் சாலை மறைக்குளம் கிராமம். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2012ம் ஆண்டு சுகண்யா சேம்பருக்கு வேலைக்கு சென்றோம்.

2. எங்கள் ஊரைச் சேர்ந்த 10 குடும்பங்கள் அங்கு வேலைக்கு சென்றோம். எங்களை எங்கள் ஊரைச் சேர்ந்த கார்த்திக் என்பவர் வேலைக்காக அழைத்துச் சென்றார். நாங்கள் வேலை செய்யும் நேரத்தில் வேலையை ஒழுங்காக செய்யவில்லை என்று கம்பை வைத்துக் கொண்டு எங்களை வேலை வாங்கினார்கள்.

3. நாங்கள் வாரத்தில் 6 நாட்கள் வேலை செய்வோம். வேலை சமயத்தில் எங்களால் எங்கும் செல்ல இயலாது.

4. வேலைக்கு அழைத்துச் சென்ற மேஸ்திரியுடன் பிரச்சனை ஏற்பட்டது. அரசு அதிகாரிகள் வந்து எங்களை மீட்டுச் சென்றார்கள். நாங்கள் வேலை செய்யும் பணத்தில் பாதி பணத்தை எங்களுக்கு சம்பளமாக கொடுப்பார்கள். மீதி பாதியை நாங்கள் பெற்றுக் கொண்ட ரூ.40,000/– முன் தொகைக்கு வரவு வைத்துக் கொள்வார்கள். ஆஜர் எதிரி தான் சுகண்யா சேம்பரின் உரிமையாளர் ஆவார். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.